Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 3-6-1985 திங்கட்கிழமை வைகாசி 21 (நம்மூரான் 13) முழக்கம் 118

அமைச்சர் தொண்டமான் கருத்து :

## இம்முறை முடிவு கிடைக்காவிடின் நெருக்கடி மேலும் அதிகரிக்கும்!

(கொழும்பு)

தற்போது இந்தியத் தலைநகரில் இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையில் இடம்பெற்று வரும் இனப் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் சரியான ஒரு முடிவைக் காணத் தவறுமாயின், எதிர்காலத்தில் நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கலாமென்று அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்தார். இரண்டு நாட்டு அரசாங்களில் ஏதாவதொன்று தீர்வுக்கான நல்ல யோசனையை முன் வைத்துப் பேச்சுவார்த்தையை —4-ஆம் பக்கம் பார்க்க

★ பெருவாரி ஆயுதங்களும் மீட்கப்பட்டதாக 'புலிகள்' உரிமை:

# குச்சவெளி பொலிஸ் நிலையம் தரைமட்டமானது! கடற்படை முகாம் மீதும் 3 மணிநேர தாக்குதல்!

குச்சவெளி பொலிஸ் நிலையம் நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் கடற்படை அதிகாரி ஒருவரும் ஆறு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளதாக அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த கடற்படை அதிகாரியே கொல்லப்பட்டதாகவும் மற்றும் எட்டு பாதுகாப்புப் படையினர் காயமடைந்ததாகவும் அரசாங்க அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது புதுடில்லியில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்கும் வகையிலேயே இத்தாக்குதலை பிரிவினை கோரும் கெரில்லாக்கள் மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் இப்போது தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ரூபவாஹினி நேற்று தெரிவித்தது.

அதேவேளை குச்சவெளி பொலிஸ் நிலையத் தகர்ப்பையும், கடற்படை முகாம் தா — 4 ஆம் பக்கம் பார்க்க

# பிரச்சினைக்கு இணக்கம் காண இரு தலைவரும் பகீரத முயற்சி!

## 45 நிமிட சந்திப்பில் மனம் திறந்து பேசினர்; இன்று இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் நேற்றுக்காலை சுமார் முக்கால் மணி நேரம் உதவியாளர்கள் எவருமின்றி மிகவும் அந்தரங்கமாக நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஈழத் தமிழரின் நீண்டகாலப் பிரச்சினைக்கு இணக்கமான ஒரு முடிவைக் காண பகிரத முயற்சிகளை மேற்கொண்டதாகவும், திர்க்கமான முடிவு எதனையும் காணுமலே பேச்சுவார்த்தைகளை மீண்டும் இன்று காலை தொடர்வதற்கு வசதியாக ஒத்திவைத்ததாகவும் நேற்றிரவு கொழும்புக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று காலை இரு தலைவர்களும் நடத்தவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது இறுதியானதும், தீர்க்கமானதுமான ஏதாவது ஒரு முடிவை அவர்கள் எடுக்கக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெயவர்த்தனவும் ராஜீவ் காந்தியும் தனிமையில் பேசியதைத் தொடர்ந்து, அடுத்த ஒருமணி நேரம் இரு நாட்டு அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி, நரசிம்மராவ் ஆகியோர் உடனிருக்க பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இவர்களது பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்த அதே வேளையில் இரு நாட்டுச் சிரேஷ்ட அதிகாரிகளும், அரசியல் ஆலோசகர்களும் மற்றொரு அறையிலிருந்து இனப் பிரச்சினை விவகாரங்களை ஆதியோடு அந்தமாக அலசி ஆராய்ந்தனர்.

தமிழ்ப்பகுதிகளில் மாவட்ட சபை அல்லது மாகாணசபை

... 4-ஆம் பக்கம் பார்க்க

### தப்பிய பகுதியும் தகர்ப்பு

யாழ் பொலிஸ் நிலையத்தின் மீது ஏப்ரல் 10ம் திகதி இடம் பெற்ற தாக்குதலில் சேத

—4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ். கொழும்பு பஸ்களுக்கு கெக்கிராவையில் கல்வீச்சு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குமிடையே நேற்றுப் பகல் சேவையிலீடுபட்ட பல பஸ்களுக்குக் கெக்கிராவையில் வைத்து கல்வீச்சு நடத்தப்பட்டது.

பாதையின் பல இடங்களிலும் பொலிஸாரும், ஊர்காவல் படையினரும் அடிக்கடி சோதனை நடத்திய போதிலும், கல்வீச்சும் சாதாரணமாகவே நடைபெற்றதாக காயமடைந்த பிரயாணி ஒருவர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தனியார் பஸ் ஒன்றில் வந்த மூன்று பிரயாணிகள் காயமடைந்திருந்தனர் மற்றொரு பஸ்ஸின் சாரதி மண்டையில் காயமடைந்திருந்தார்.

மேலும் இரு பஸ்களின் கண்ணாடிகள் நொருங்குண்டன. தெய்வாதீனமாக பிரயாணிகளுக்குக் காயமேற்படவில்லை.

## யாழ். ஆஸ்பத்திரி ஓவர்ஸியர் இரவுவேளை கடத்தப்பட்டார்

யாழ். அரசினர் வைத்திய சாலையின் ஓவர்ஸியர் திரு. கே செல்வராஜா (53 வயது) நேற்று முன்தினம் இரவு சுமார் ஒன்பது மணியளவில் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் கடமையிலிருந்த போதே யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து இனந்தெரியாத சில இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகவும், முகமூடி அணிந்து வந்த சில இளைஞர்களே முன்பக்க மின்விளக்கை அணைத்துவிட்டு இவரை கடத்திச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரி

—4 ஆம் பக்கம் பார்க்க

### கொக்குவில் தபாலகம் இன்றுமுதல் இயங்கும்

கடந்த ஜனவரி மாதம் 24ம் திகதி மூடப்பட்ட கொக்குவில் தபாலகம் மீண்டும் இன்று முதல் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. தபாலதிபர்

- 4 ஆம் பக்கம் பார்க்க

கூட்டணி விடுத்துள்ள கோரிக்கை:

# தமிழ் பகுதியிலிருந்து ஆயுதப்படை முதலில் வெளியேற்றப்பட வேண்டும்!

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளிலிருந்து இராணுவம், கமாண்டோ உட்பட சகல ஆயுதப் படையினரையும் வாபஸ் பெற வேண்டுமெனவும், இங்குள்ள சகல கட்டுப்பாடுகளையும் நீக்கி மீண்டும் சிவில் நிர்வாகத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமெனவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பாரத அரசின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அழைப்பின் பேரில் புதுடில்லி சென்ற தலைவர்கள் மு. சிவ

—4-ஆம் பக்கம் பார்க்க

## நயினாதீவு அம்பாள் உற்சவம் இம்முறை நடைபெறுமா?

(புங்குடுதீவு)

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் வழமைபோல் இவ்வாண்டு நடைபெறுமா என்ற சந்தேகம் பக்தர்கள் மத்தியில் பரவலாக நிலவுகிறது.

நயினாதீவில் நிலவும் பதற்ற நிலையே இதற்குக் காரணமாகும். பல்லாயிரக் கணக்கான

—4-ஆம் பக்கம் பார்க்க

ஆயிரக்கணக்கான மாணவர் கல்லூரி செல்லமுடியாத நிலை

# பாடசாலை பஸ் சேவைகளும் மறு அறிவித்தல் வரை ரத்து

வடபிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போக்களில் டீசல் இல்லாததால், இன்று முதல் குடாநாட்டின் சகல பஸ்சேவைகளும் பூரணமான ஸ்தம்பித நிலையை அடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது

தினசரி காலையிலும் மாலை

—4-ஆம் பக்கம் பார்க்க

# தமிழரின் அழியாச் சொத்தாகிய கல்வி நெருக்கடி நிலையால் பாதிப்படைந்துள்ளது

## -பாடசாலை அதிபர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

ஒரு பிள்ளை பெற்றோரின் கையில் இருந்து வளரும் நிலையைப் பொறுத்தே அதன் பண்பாடு உருவாகிறது. ஆகையால் அக்காலத்தில்தான் பெற்றோராகிய நாம் அப்பிள்ளையை நல்ல வழியில் உருவாக்கிவிட வேண்டும். அதன் பின்னர் பாடசாலையில் சேர்ந்ததும் ஆசிரியர்கள் அதை மிகுதியாக வழிப்படுத்துகிறார்கள். இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள கல்வியதிகாரி திரு. மகேசன் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அதிபர் திரு. எஸ். எம். கந்தையா தலைமை வகித்துப் பேசுகையில், எமது பிள்ளைகளின் அழியாச் சொத்தாகிய கல்வி தற்போதைய நெருக்கடி நிலையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. ஆகவே இந்த நேரத்தில் ஆசிரியர்களாகிய நாமும், பெற்றோரும், பெரியோரும் கருத்தொருமித்து மாணவர்களிடம் கல்வியை வளர்ப்பதுடன் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய நற்பழக்கங்களையும் வளர்க்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்தி அவர்கள் பாடசாலைக்குச் செல்லாது தமது காலத்தையும் நேரத்தையும் வீணாக்குவது கவலைக்குரியது. இந்நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும் என்றார்.

யாழ். சாதனா வித்தியாசாலை அதிபர் திரு. க. சொக்கலிங்கம் 'பாடசாலை அபிவிருத்தியும் பெற்றோரின் பங்கும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. சி. மு. கந்தையா (அதிபர்), இணைச் செயலாளர்கள் திரு சி. சின்னராசா, திரு. பி. நடராசா, பொருளாளர் திரு. ஆ. வே. துரைரத்தினம் (உப அதிபர்)

# ஏற்புத் தடுப்பு மருந்தின்றி நோயாளிகள் படும்பாடு

(சித்தன்கேணி)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் ஏற்பு ஊசி மருந்தில்லாததனால் இங்கு சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளிகள் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்.

ஏற்பு ஊசி மருந்து வெளியிலிருந்து வாங்கி வந்தால் தாம் அந்த ஏற்பூசி மருந்தை ஏற்றி விடலாமென இங்குள்ள டாக்டர்கள் கூறுகின்றனராம். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் செல்லும் இந்த ஏழை நோயாளிகள் பணம் கொடுத்து இந்த மருந்தை வாங்க முடியாது பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இங்கு காயங்களுக்கு மருந்து கட்டுகின்ற பண்டேஜ் துணிக்கும் பெரும் தட்டுப்பாடேற்பட்டுள்ளது. காயங்களுக்கு மருந்து கட்டச் செல்லும் நோயாளிகளை வீட்டிலிருந்து துணி கொண்டுவருமாறு வற்புறுத்துகின்றனராம்.

துணி கொண்டு செல்லாதவர்களுக்கு மருந்து கட்டாது அவர்களைத் திருப்பியனுப்பி விடுகின்றனர்.

# வீர அஞ்சலி பிரசுரம்

(மானிப்பாய்)

அண்மையில் மானிப்பாய்ப் பகுதியில் நிகழ்ந்த திடீர் முற்றுகையின்போது மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிவசரணம் (கரன்), பரமசிவம் (குட்டி), சாந்தகுமார் (தேவு) ஆகிய மூவருக்கும் வீர அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(சுண்டுக்குளி)

யாழ். நகரில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருவதால் சைக்கிள் வண்டிப் பாவனையாளர்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர். யாழ். பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் வீதியில் நிறுத்தி வைக்கப்படும் சைக்கிள்களும், கச்சேரிக்கு முன்னால் நிறுத்தப்படும் சைக்கிள்களும் அண்மைக்காலமாக மாயமாக மறைந்து வருகின்றனவாம்.




❋ அரியாலை சிதம்பரநாதன் தேவசேனா தம்பதிகளின் மகன் சஞ்சயன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ சாவகச்சேரி கெருடாவில் சத்தியமூர்த்தி இராசமணி தம்பதிகளின் மகன் கோகுலன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ பாஷையூர் யேசுரட்ணம் பிரான்சிஸ்கா தம்பதிகளின் மகன் பிறின்ரன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ வல்வெட்டித்துறை இராஜரட்ணம் தனேஸ்வரி தம்பதிகளின் மகள் பாமதி இன்று தனது பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ தாவடி வடக்கு சிவசுப்பிரமணியம் திலகவதி தம்பதிகளின் மகன் சிவரூபன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ கிளிநொச்சி இராசையா சித்திராதேவி தம்பதிகளின் மகள் ஜெயா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ்-மடம் வீதி எட்வேட் செல்வராணி தம்பதிகளின் மகன் நிக்சன் ஜெரூட் இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## கல்லூரி அதிபர் அறிவுரை

# தற்போது ஆடம்பரமான நிகழ்ச்சி தவிர்த்தல் நலம்

(அளவெட்டி)

"வடக்குக், கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரை இன்று தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கிறது. உயிருக்கும், உடைமைக்கும் எதுவித பாதுகாப்புமின்றிக் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் ஆடம்பர நிகழ்ச்சிகளையும், களியாட்ட விழாக்களையும் தவிர்ப்பது நல்லது" என்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு. ந. சிவபாதம் குறிப்பிட்டார்.

"மாணவர்கள் வெற்றி தோல்வியை, முழுமனத்தோடும், நல்லபண்போடும் ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும். ஆரோக்கியமாக உடம்பை வளர்ப்பதற்கு மாணவர் விளையாட்டுத் துறைகளிலும், யோகாசனப்பயிற்சியில் ஈடுபடுதலும். அவசியமான தொன்று" என்றும் அவர் சொன்னார்.

இவ்விளையாட்டுப் போட்டிகளில். சின்னத்தம்பி, கனகசபை, அருணாசலம், ஆகிய இல்லங்கள் முறையே முதலாம், இரண்டாம் மூன்றாமிடங்களைப் பெற்றன. இவ்வைபவம் மிக அமைதியான விதத்தில் நடைபெற்றது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூச்சாடி, மீன் தொட்டி என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். இ. யோகராசா, ஆறுகால்மடம், பழம் றோட், ஆனைக்கோட்டை.

### திருமணம் நிறைவேற்ற

எம்மிடம் பல வகையான மணமக்கள் உண்டு. விரைவில் விவாகம் நிறைவேற்றுவோம். மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

### வாடகைக்கு

கோப்பாய் சந்திக்கருகாமையில் கடைகள் வாடகைக்கு இருக்கின்றன. விபரங்களுக்கு: ஏல விற்பனை நிலையம், கோப்பாய்,

### பயிற்சி

ரெலிவிசன். வீடியோ டெக்நிப்பியறிங், எலக்றிக்கல் வயறிங், Hotel Management, French கூடிய செய்முறைப் பயிற்சியுடன் நடைபெறுகின்றன. ஆரம்பம் 06-06-1985. வந்து பயிற்சி பெறமுடியாதவர்கள் தபால் மூலம் இப்பயிற்சிகளை கற்கலாம். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபால் உறையை அனுப்பி பெற்றுக் கொள்ளவும். Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம்.

## பருத்தித்துறையில் சைவ மன்ற

# வேதாகம திருமுறைப் பாடசாலையும், சைவ நூலகமும் திறக்கப்பட்டன

(புலோலி)

பருத்தித்துறையில் இலங்கை சைவ மன்றத்தின் வேதாகம திருமுறைப் பாடசாலையும், சைவ நூல் நிலையமும் சமய ஆசார முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

புலோலி கிழக்கு பசுபதீஸ்வரர் ஆலய பார்வதபர்த்தினி கலா மண்டபத்தில் அமைந்துள்ள இவ்வேதாகம திருமுறைப்பாடசாலையையும், சைவ நூல் நிலையத்தையும் தொழிலதிபர் திரு. அ. நாகரத்தினம் திருமதி சின்னம்மா நாகரத்தினம் ஆகியோர் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தனர்.

இலங்கைச் சைவ மன்றத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வேதாகம திருமுறைப் பாடசாலைத் திறப்புவிழாவையும், சைவ நூல் நிலையத் திறப்பு விழாவையும் பிரம்மஸ்ரீ க. சதாசிவயோகஸ்காமக்குருக்கள், திரு. திருமதி நாகராசா திரு. ஏ. என் எஸ். திருச்செல்வம், திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

வித்துவான் கே. கிருஷ்ணபிள்ளை, சைவப் புலவர் சி. வேலாயுதம் ஆகியோர் இவ் விழாவிலே சமயக் கருத்துரைகளை வழங்கினார்கள். மன்றச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணசிங்கம் நன்றியுரை வழங்கினார்.

இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள சைவ நூல் நிலையத்திற்கு திரு. வே. முருகேசு சுமார் 20,000 ரூபா பெறுமதியான சமய நூல்களையும், தொழிலதிபர் திரு நாகரத்தினம். சுமார் 10,000 ரூபா பெறுமதியான தளபாடங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

விழாவின்போது முன்னாள் பருத்தித்துறை நகரசபை உப தலைவர் டாக்டர் எஸ். வேல்முருகுவினால் எழுதப்பட்ட "சமய ஒழுக்கம்" என்றும் நூல் மன்றத் தலைவர் பேராசிரியர் கணேசலிங்கத்திடம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

# 25000 ரூபா நிதியுதவி

(புலோலி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் கடமையாற்றி அண்மையில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான சோ. ஜெயசந்திரனின் குடும்பத்திற்கு வடபகுதியிலுள்ள மக்கள் வங்கி ஊழியர்கள் 25,000 ரூபா நிதி உதவி வழங்கியுள்ளனர்.

# தர்மபரிபாலன சபை விபரம்

கோண்டாவில் வடக்கு ஞானவைரவர் கோவில் தர்மபரிபாலன சபையின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. ஐயாத்துரை, உப தலைவர் திரு. க. சின்னராசா, செயலாளர் திரு க. சந்திரகுலசிங்கம், உப செயலாளர் திரு. ஐ. ஞானேஸ்வரன் பொருளாளர் திரு. சி. மா. அரசரத்தினம், உப பொருளாளர் திரு. க. ஸ்ரீதரன் கணக்குப் பரிசோதகர் திரு. நா. நமசிவாயம்.

எட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவானார்கள்.

# புதிய டிரான்ஸ்போமர் இணைப்பு

(கல்வியங்காடு)

கொக்குவில் உப-அலுவலகத்தினால் கோண்டாவில் மேற்கு உப்பு மடத்தடியில் புதியதோர் டிரான்ஸ்போமர் அமைக்கப்படவுள்ளது.

ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் அமையவிருக்கும் இந்த டிரான்ஸ்போமர் இருநூற்றைம்பது கிலோவாட்ஸ் உடையதாக இருக்கும். முன்னைய டிரான்ஸ்போமர் அகற்றப்பட்டு இப்புதிய டிரான்ஸ்போமர் பொருத்தப்படுவதால் இப்பகுதியில் அடிக்கடி ஏற்பட்ட மின் மோசடிகளும் மின் தடைகளும் குறைவதோடு சீரான மின் விநியோகமும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ் பகுதி பாடசாலைகளின் மாணவருக்கு பிஸ்கட்

(புங்குடுதீவு)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு விரைவில் கெயர் பிஸ்கட்டுகள் கிடைக்கவுள்ளன. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் இவ்வாண்டு பாடசாலை மாணவர்களுக்கு இதுவரை கெயர் ஸ்தாபனம் வழங்கும் பிஸ்கட்டுகள் விநியோகிக்கப்படவில்லை.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியரம்பிள்ளை மேற்கொண்ட துரித முயற்சியின் பேறாக மீண்டும் கெயர் விசுக்கோத்துக்கள் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கவுள்ளன.

முதலாம் ஆண்டு முதல் நான்காம் ஆண்டுவரையுள்ள பாடசாலை மாணவர்களுக்கே வழங்கப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கது.

## பாலைப்பழத்தால்

# கவலையிலும் களிப்பு

(மருதங்கேணி)

சுண்டிக்குளப் பகுதியில் பெருமளவில் காய்க்கும் பாலைப்பழம் இங்கு அகதிகளாக வந்த மக்களுக்குப் பெரிதும் உதவுகிறது. அவர்கள் அக்கறை ஆசையோடு உண்கின்றனர். பாலை மரங்களின் இலைகளே தெரியாத அளவுக்குப் பழங்களால் ஒரே மஞ்சள் நிறமாக மரங்கள் காட்சியளிக்கின்றன. அகதிகளுடன் இப்பகுதி மக்களும் உண்ட பின்னும் பெருந் தொகையான பழங்கள் வீணாகின்றன.

The DATACENTER
week - end course in
COMPUTER PROGRAMMING
The COBOL language module
starts on Saturday 8th June, 1985.
Duration (approx.) 8 weeks
Course fees: 500/-
The DATACENTER,
77, Main Street,
Jaffna.

### உதய சிந்தனை

அடக்கமில்லாத அரசியல் தலைவன்: வருங்காலத் திட்டத்திற்கு வழி வகுக்கத் தெரியாத மந்தி, உற்ற சமயத்தில் உதவாத நண்பன் ஆகியோரை எந்தக் காலத்திலும் நம்பக் கூடாது.

— விவேக சிந்தாமணி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

3-6-1985 திங்கட்கிழமை (குரோதன வைகாசி 21)

# தமிழரின் அச்சத்தை ஸ்ரீமாவோ நிரூபித்தார்

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன என்ன யோசனைகளை தம் மனதில் வைத்துள்ளார்?

இவைகளை உடனடியாகச் செயற்படுத்தும் வல்லமை அரசாங்க கட்சிக்கு உண்டா?

இவைகளைத் தமிழ்பேசும் மக்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், அமைப்புக்களின் தலைவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

இவ்வாறான பல கேள்விகள் இப்போது பலமாக அடிபடுகின்றன. ஜனாதிபதியின் இந்தியத் தலைவருடனான திடீர் சந்திப்பும் பேச்சுவார்த்தைகளுமே இதற்குக் காரணமாகும்.

ஆனால் எல்லாவற்றுக்கும் முன்னதாக, ஜனாதிபதி அவர்களின் ஆலோசனைகளை சிங்கள அரசியல் கட்சிகளும், பௌத்த மக்களும் ஏற்று, அங்கீகாரம் வழங்குவார்களா என்பது தான் முதலில் விடைகாணப்பட வேண்டிய விடயமாகும்.

நேற்று முன்தினம் எமது பத்திரிகையில் முதல் பக்கச் செய்தியாக வெளியாகிய, சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் 'முடிவான கருத்து' இதனையே வலியுறுத்துகின்றது.

தமிழர் பிரச்சினை பொதுத் தேர்தலின் அரசியல் விஞ்ஞாபனமாக மாறும் ஒரு சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது என்பதை ஸ்ரீமாவோவின் கூற்று பகிரங்கப்படுத்தியுள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி உத்தேசித்திருக்கும் ஆலோசனையை அவர் பகிரங்கப்படுத்த வேண்டுமென்றும், அதனை பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் மக்கள் முன்னால் வைத்து அங்கீகாரம் பெற்றால் மட்டுமே அதனை அமுல்செய்ய முடியுமென்றும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

மக்கள் முன்னால் தேர்தல் மூலம் வைத்து அங்கீகாரம் பெறாமல் எந்த யோசனையையும் அரசாங்கம் அமுல்செய்ய முன்வருமானால் அதனை இறுதிவரை தாம் எதிர்த்தே தீருவதாகவும் அம்மையார் சூளுரைத்துள்ளார்.

தம்மை நேரில் சந்தித்த பாரத வெளியுறவுச் செயலர் ரமேஷ் பண்டாரியிடம் இக்கருத்தை அவர் தெரிவித்திருப்பதால், இதனை வெறுமனே ஒரு "சோடாப் போத்தல்' அறிக்கை என்றும் தட்டிக்கழிக்க முடியாது.

ஐந்து தினங்களுக்கு முன்னர் புதுடில்லியில் வைத்து, தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் எழுப்பிய அச்சம், எவ்வளவு உண்மையானது என்பதை அம்மையாரின் கருத்து நிரூபணமாக்கியுள்ளது என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

"தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனையை முதலில் தமது இன, மத மக்களின், அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தைப்பெற்ற பின்னர் அவர்களின் தீர்ப்பைப் பெற்ற பின்னர் பகிரங்கப்படுத்துவதே நல்லதென'' திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள், எழுதப்பட்ட சுனவான்கள் ஒப்பந்தங்களுக்கு என்ன நடைபெற்றது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்த அமிர்தலிங்கத்தின் அந்த அறிக்கை, அரசியல் தீர்க்க தரிசனம் வாய்ந்தது என்பதை, ஸ்ரீமாவோ அம்மையாரின் கருத்து மெய்ப்பித்துள்ளது.

உள்வீட்டுக்குள்ளேயே ஏற்படும் கருத்து வேறுபாடு மோதல்களால் தமிழர் பிரச்சினை அனுமார் வால்போல நீண்டு கொண்டே போகின்றது.

எனவே நாடுவிட்டு நாடுபோய் இப்பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பது சாத்தியமாகுமென்பது ஐயத்துக்குள்ளாகியுள்ளது.

சர்வ கட்சி, சர்வமத மாநாடுகள் பலன் தருமா என்பதும் சந்தேகத்துக்குள்ளாகியுள்ளது.

திருவாளர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டது போல சிங்கள அரசியல் கட்சிகள், பௌத்த மதப் பிரமுகர்களிடம் அங்கீகாரம் பெற்ற பின்னர் அதிஉத்தம ஜனாதிபதி தமது இனப் பிரச்சினைத் தீர்வு ஆலோசனைகளை பகிரங்கப்படுத்துவதே நல்லது.

தேவையற்ற பிரச்சினைகளில் தமிழ் மக்களை ஈடுபடுத்தாதிருக்கவும் இது வழிவகுக்கும்.

### விமான நிலையத்தில் அன்பான வரவேற்புக் கிடைத்தது

# காந்தி, நேரு, இந்திராசமாதிக்கு ஜே. ஆர். மலர்வளைய அஞ்சலி

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி உட்பட தனது குழுவினருடன் சனிக்கிழமை புதுடில்லி விமான நிலையம் வந்தடைந்தபோது அவர்களைப் பாரத ஜனாதிபதி ஜெயில்சிங், பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி, திருமதி ஸோனியா காந்தி, வெளிவிவகாரக் கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி, வெளிவிவகார இணையமைச்சர் திரு குர்ஷித் ஆலம்கான், மற்றும் உயரதிகாரிகள் அன்புடன் வரவேற்றனர். எயர்லங்காவின் விசேட விமானம் ஒன்றில் இலங்கைக் குழுவினர் வந்தனர். ஞாயிறு பிற்பகல் பாரதப் பிரதமருடன் இலங்கை ஜனாதிபதியும் பங்களாதேஷ் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

புதுடில்லியில் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன காந்திஜி, நேருஜி, திருமதி இந்திரா காந்தி ஆகியோரின் சமாதிகளுக்கு நேற்று மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினர்.

பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பங்களாதேஷுக்கு இணைந்து விஜயம் மேற்கொள்வதைத் தாம் பெருமையாகக் கருதுவதாகப் பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டமைச்சர் சாகுல் ஹமீதுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி ஒன்றில் பங்களாதேஷ் வெளிநாட்டமைச்சர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

## எல்லை மூடல்

(புதுடில்லி)

சீக்கியத் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கும் பொருட்டு பாரதம் பாகிஸ்தானுடனான எல்லைகளை மூடியுள்ளது.

## குஜராத் நிலைமை

(புதுடில்லி)

குஜராத்தில் ஒரு கத்திக் குத்துச் சம்பவத்தைத் தவிர பொதுவாக நிலைமை அமைதியாக இருப்பதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவில் கடும் புயல் பலர் பலி, வீடுகளும் சேதம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கடும் புயலால் எண்பத்தெட்டுப் பேர் இறந்தனர், முப்பது பேர் காயமடைந்தனர்.

ஆயிரத்துக்கும் அதிகமானோர் வீடுகளை இழந்தனர்.

பலர் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இத்தாலியப் பிரதமர் ரஷ்ய ஜனாதிபதியுடன் சந்திப்பு!

(மாஸ்கோ)

இத்தாலியப் பிரதம மந்திரி திரு. எடினோ கிரெக்ஸி சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. கொர்பசெவ்வைச் சந்தித்து மாஸ்கோவில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

அவர்கள் சந்திப்பில் இருதரப்பு உறவு, பொருளாதாரத் தொடர்பு மற்றும் சர்வதேச விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இந்திரா சிலை

(மதுரை)

தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பழனியாண்டி மதுரையில் திருமதி இந்திரா காந்தியின் சிலை ஒன்றைத் திறந்து வைத்தார்.

## 'காதலுக்குக் கண்ணில்லை' அதன் அர்த்தம் ஆயிரம்

(பஸா ரொப்லெஸ் சலீவ்)

காதலுக்குக்கண்ணில்லை என்பார்கள். அந்த வகையில் உலகின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ள ஓர் சம்பவம் பற்றி அறிவிக்கப்படுகிறது. ருத் கிம்பர் என்ற தொண்ணூற்று இரண்டு வயது மூதாட்டி (?), இருபத்துஎட்டே வயதுடைய கெவின் என்ற கட்டுமஸ்தான ஆண்மகனைக் கல்யாணம் செய்து கொண்டுள்ளார். மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் முகிழ்த்ததாம் இந்த அபூர்வக் காதல்.

இக்காதலர்கள் மிக எளிமையானவிதத்தில் தம் கல்யாணத்தை முடித்துக் கொண்டனர் ருத்தின் உறவினர் இக்கல்யாணத்தை நிறுத்தி விடக் கூடும் என்ற கிலேசமே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## டில்லியில் திரைப்படவிழா

(புதுடில்லி)

புதுடில்லியில் நடைபெற்ற கோலாகலமான திரைப்பட விழாவில் கடந்த வருடத்தின் சிறந்த கலைஞர்க்குப் பரிசில்களை ஜனாதிபதி திரு. ஜெயில் சிங் வழங்கினர்.

பிரபல இயக்குநர் திரு. சத்தியஜித்ரே, உட்பட 'மீண்டும் ஒரு காதல் கதை' என்ற படத்தை இயக்கிய திரு. பிரதாப் போத்தனுக்கும் பரிசுகள் கிடைத்தன.

திரு. பிரதாப் போத்தன் பிரபல தமிழ் நடிகையும் நடிகவேள் எம். ஆர். ராதாவின் மகளுமான ராதிகாவின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உணவில் விஷம்

(ஆற்காடு)

உணவில் பல்லி விழுந்ததால் ஏழு பிள்ளைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

ஆற்காட்டில் நிகழ்ந்த இச் சம்பவம் தொடர்பாக உணவுக் கூடப் பொறுப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ராஜினமா

(புதுடில்லி)

மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. பட்டேல் தனது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

இதற்கான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை.

## தீவைப்பு, கல்வீச்சு சம்பவம்: வெள்ளையர் கறுப்பர் மடிவு

(ஜொஹனஸ்பேக்)

இரண்டு வெள்ளையரும் ஒரு கறுப்பரும் கல்வீச்சு தீவைப்புச் சம்பவத்தினால் காயமுற்றனர் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

தென்னாபிரிக்காவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த பதினைந்து மாதங்களில் இங்கு நடைபெற்ற கலவரத்தில் நானூறுக்கும் மேற்பட்டோர் கொலைப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சீனப்பிரதர் பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டார்

(பீக்கிங்)

சீனப் பிரதம மந்திரி திரு. ஷியோ ஷியால் பிரிட்டனுக்கு ஒருவசர விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஹொங்கொங் கையேற்பு விடயம் தொடர்பாகவே இவ் விஜயம் அமைகிறது எனக் கூறப்பட்டது.

எலிஸபெத் மகராணியும் அடுத்த வார முற்பகுதியில் சீனாவுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விஜயம்

(தாய்லாந்து)

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. ஆர்தர் டூவே தாய்லாந்து - கம்போடிய எல்லைக்கருகில் உள்ள கம்போடியன் அகதிகள் பகுதிக்கு விஜயம் செய்தார்.

## பஸ் விபத்து

(அலெஸ் பிரான்ஸ்)

பஸ் விபத்து ஒன்றில் மூன்று இள வயதினரும், நான்கு நடுத்தர வயதினரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்தில் முப்பத்து ஒன்பது பேர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

3.6.1985 திங்கட்கிழமை

# ஈழமுரசு

## மூதூரில் இரு கிராம தாக்குதலில் ஐவர் மட்டுமே மரணமாம்!

திருமலை மாவட்டத்தில் மூதூரிலுள்ள இரண்டு கிராமங்களில் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றி சில வெளிநாட்டு செய்தி நிறுவனங்களால் வெளியிடப்பட்ட செய்தியை அரசாங்க அதிகாரி ஒருவர் மறுத்திருக்கின்றார். இத்தாக்குதல்களில் 50 பேர் மரணமாகவில்லை எனவும், ஐந்து பேர் மட்டுமே கொல்லப்பட்டதாகவும், மூன்று பேர் காயமடைந்ததாகவும், ஐம்பது வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் பாதிப்புற்ற சுமார் இருநூறு பேர் இங்குள்ள இரண்டு பாடசாலைகளிலும், ஆலயமொன்றிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனராம்

நிதி அமைச்சர் ரொனி டி மெல் பேச்சு :

## வட, கிழக்கு நெருக்கடியினல் முழு இலங்கைக்கும் பாதிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினால் முழு இலங்கையுமே இன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பதாக நிதி திட்டமிடல் அமைச்சர் ரொனி டிமெல் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் என்பது சர்வதேச ரீதியாக பொதுவான தொன்ருக இருந்தாலும், இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை அது வெகுவாகப் பாதிக்கின்றது என்று குறிப்பிட்ட அமைச்சர் இப் பிரச்சினைக்கு முக்கிய கவனம் செலுத்தத் தவறினால் எமக்கும் எதிர்காலத்துக்கும் நல்லதல்ல என்றும் அவர் சொன்னார்.

மாத்தறை மாவட்ட இளைஞர்களுக்கான கருத்தரங்கொன்றில் அமைச்சர் நேற்றுக்காலை சிறப்புரையாற்றினார்.

பயங்கரவாதப் பிரச்சினையினால் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளதால் பொருளாதாரச் சீர்குலைவும் ஏற்பட்டுள்ளதென எச்சரித்தது டன், நாட்டின் ஒரு பகுதியில் நடைபெறும் பிரச்சினைகளால் மற்றைய பகுதிகள் பாதிக்கப்படாது பார்த்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையெனவும் சுட்டிக்காட்டினார்.

### செல்வராஜாவை விடுதலை செய்க!

## ஆஸ்பத்திரியின் ஊழியர்கள் புனித தொண்டு புரிபவர்கள்

கடத்திச் செல்லப்பட்ட யாழ். ஆஸ்பத்திரி மேற்பார்வையாளரான திரு கே. செல்வராஜாவை உடன் விடுதலை செய்ய வேண்டுமென வைத்தியசாலையின் சக ஊழியர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும், நோயாளருக்குப் புனிதமான தொண்டு செய்பவர்கள். ஆகவே, இப்புனிதமான செயலில் ஈடுபட்டிருக்கும் எந்த ஒரு ஊழியரையும் கடத்துவது எமது மக்களிற்கும் உலகிற்கும் பெருந் தீங்காகும் என்று அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரின்டன் முதல் சிற்றூழியர் வரையான சகல ஊழியர்களாலும் நடத்தப்பட்ட அவசர கூட்ட முடிவில் இவ் அறிக்கை விடப்பட்டது.

### கொக்குவில்....

— 1-ம் பக்கத் தொடர்

திரு. அ. குணபாலசிங்கம், மற்றும் கொக்குவில் விழிப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் பொதுமக்கள் நன்மை கருதி எடுத்த முயற்சியின் பலனுகவே இதனை மீண்டும் திறக்க தபால் திணைக்களம் அனுமதி வழங்கினர். இனிமேல் எவ்வித அசம்பாவிதமும் இடம் பெருது சகலரும் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று விழிப்புக்குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### இம்முறை முடிவு...

... 1ஆம் பக்கத் தொடர்

முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று குறிப்பிட்ட அமைச்சர், இம் முறை பேச்சுவார்த்தை சரியான பயனை அளிக்கத் தவறினால், இனிமேல் தொடருவதற்கே இடமில்லாமல் போய் விடுமெனவும் சொன்னர்.

### தமிழ் பகுதியிலிரு ..

—1ஆம் பக்கத் தொடர்

சிதம்பரம், அ. அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் ஆகியோர் வெள்ளிக்கிழமை இரவு சென்னை திரும்பினர்கள்.

இனப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை ஏதாவது நடைபெறுமானல், தமிழ் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களும் எதுவித நிபந்தனையுமின்றி அதில் பங்கேற்கும் வகையில் சாதகமான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் எனவும் கூட்டணித் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இரு நாட்டுத் தலைவர்களின் பேச்சுவார்த்தையில் ஏதாவது ஆக்கபூர்வமான ஆலோசனை முன்வைக்கப்படுமானல் அது, பற்றி கூட்டணியின் அரசியல் குழு கூடி ஆராய்ந்து முடிவை தெரிவிக்குமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### பிரச்சினைக்கு....

—1ஆம் பக்கத் தொடர்

அமைத்தல், தமிழ் தீவிரவாதிகளின் வன்செயல்களைக் கட்டுப்படுத்துதல், ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளை நிறுத்துதல் ஆகிய மூன்று அம்சங்களுமே இரு தலைவர்களதும் சந்திப்பில் கூடுதலாக ஆராயப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் ஜெயவர்த்தனவும் ராஜீவும் தனி விமானத்தில் பங்களாதேஷ் சென்று ஜனதிபதி இர்ஷாத்தைச் சந்தித்து தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்தனர். பின்னர் மூன்று தலைவர்களும் ஒரே விமானத்தில் சென்று புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

அமைச்சர் குர்ஷித் ஆலம் கான், செயலாளர் ரமேஷ் பண்டாரி ஆகியோரும் பங்களாதேஷ் சென்றிருந்தனர்.

அதேவேளை நேற்று மாலை மூன்று மணிமுதல் அமைச்சர்கள் நரசிம்மராவும், லலித் அத்துலத் முதலியும் தனிமையில் கூடி நீண்ட நேரமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். நேற்றிரவு இரு நாட்டுத் தலைவர்களும் பங்களாதேஷால் திரும்பிய பின்னரும் பேச்சுக்களைத் தொடரக் கூடுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஜனதிபதியும் குழுவினரும் இன்று மாலை நாடு திரும்புவார்கள்.

## இரு வாகனமும் கடத்தப்பட்டது

குச்சவெளியிலுள்ள ஜேர்மன் வானெலி அஞ்சல்நிலையம் தாக்கப்பட்ட பின்னர் அங்கிருந்த இரண்டு வாகனங்களும் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவை ஜேர்மனியர்களுக்குச் சொந்தமானவை.

### நயினதீவு...

— 1-ம் பக்கத் தொடர்

யாத்திரிகர்கள் ஆண்டுதோறும் இங்கு நிகழும் வருடாந்த உற்சவங்களில் பங்குகொள்வது வழக்கம். தற்போதைய சூழ்நிலையில் வெளியிடங்களிலிருந்து யாத்திரிகர்கள் இங்கு வருவது இலகுவல்ல எனக் கூறப்படுகிறது.

இராணுவத்தினரும், கடற்படையினரும் நயினதீவில் முகாமிட்டிருப்பதும், அடிக்கடி அங்கு இடம்பெறும் திடீர் சோதனைகளும் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்துகின்றன.

### பாடசாலை பஸ்....

—1ஆம் பக்கத் தொடர்

யிலும் நடத்தப்படும் அரச ஊழியருக்கானபஸ்சேவைகள், பாடசாலைச் சேவைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகப் போக்குவரத்துச்சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

"ஆகக்குறைந்தது பாடசாலைச் சேவைகளையாவது நடத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வவுனியாவிலிருந்து மிகவும் நெருக்கடியான நிலையில் எடுத்துவரப்பட்ட டீசல், மனிதாபிமானமற்ற முறையில் வழியில் கொள்ளையடிக்கப்பட்டதால் பாடசாலை மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்" என்று சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே வேளையில் தனியார் வான்களும் தமது சேவையை மட்டுப் படுத்தியுள்ளதுடன், கட்டணங்களையும் வெகுவாக அதிகரித்துள்ளதால் குடா நாட்டுப் போக்குவரத்துப் பிரச்சினை மேலும் அதிகரித்துள்ளது.

வீதிகளில் மணித்தியாலக் கணக்கில் தவம் கிடந்தாலும் வாகனமெதையும் காண முடியாத நிலை இங்கு உருவாகிவருகின்றது.

### யாழ் ஆஸ்பத்திரி....

...1ஆம் பக்கத் தொடர்

விக்கப்படவில்லை. நேற்றுக் காலை ஆஸ்பத்திரி ஊழியர்கள் இது தொடர்பாக அவசர கூட்டமொன்றைக் கூட்டி நிலைமையை ஆராய்ந்தனர்.

### தப்பிய பகுதி ...

...1ஆம் பக்கத் தொடர்

மடைந்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் காரியாலயத்தின் உடையாமல் இருந்த சில பகுதிகள் நேற்றுக்காலை குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

இப்பகுதியை துப்புரவு செய்வதற்காகவே கட்டடத்தின் எஞ்சிய பகுதிகள் தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது, தகர்ப்பின்போது வைக்கப்பட்ட குண்டின் சத்தம் சுமார் ஐந்து மைல் தூரத்திற்குக் கேட்கக் கூடியதாக இருந்தது.

### குச்சவெளி....

-1-ஆம் பக்கத் தொடர்

குதலையும் தாமே நடத்தியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் சுவரொட்டி மூலம் உரிமை கோரியுள்ளனர்.

பல படைவீரர்கள் கொல்லப்பட்டதாகவும், வேறு பலர் தப்பியோடியதாகவும், பொலிஸ் நிலையம் தரைமட்டமாக்கப்பட்டதாகவும், பெருவாரி ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**I. C. M. A.**

**I.C.M.A. Section 'A'**

இன்று முதல்

பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:

RAPID RESULTS INSTITUTE

212, Kachcheri-Nallur Road
Jaffna.

"GOOD WINE NEEDS NO BUSH"

தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம்போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

**நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்**

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### S. A. சந்தியாகோ, J. P.

(இளைப்பாறிய சிறைச்சாலை அதிகாரி, முகாமையாளர், A. F. றேமன்ட்ஸ் அந்தியகால சேவை, யாழ்ப்பாணம்)

### இறைவனடி சேர்ந்துவிட்டார்

இவர் தங்கமணி அவர்களின் அன்புக் கணவரும், செகராஜசிங்கம் சந்தியாகோ (முகாமையாளர், நிற்வெயர் லிமிட்., கோப்பாய்), பத்மினி, லலிதா, சூரியகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி, ஜெரூட் அலெக்சாண்டர் ஆகியோரின் அன்பு மாமனும் டிலீப், டினேஷ், பிரியங்கா, ரேனுகா, ரெஷான், டிலுக்ஷான், ஷாறிகா, றுக்ஷான், மிரூஷான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னரின் பூதவுடல் 4-6-85 செவ்வாய்ககிழமை மாலை 3-00 மணிக்கு யாழ் புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

48/1, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 3-6-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336